DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.136/2022**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.1

Defence

Court

Name : மஞ்சுளா
Father/ Husband Name : மாதவன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of **10.05.2023**

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தளுதனூரில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை பார்த்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 16.03.2020ம் தேதி காலை 8 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தேன் அப்போது சாட்சிகள் அபிநயா, அகல்யா, மற்றும் சாட்சி சின்னதம்பியான எனது அப்பா விருந்தாளியாக வீட்டிற்கு வந்து என்னுடன் அப்போது இருந்தார். அப்போது 1வது எதிரி ராமச்சந்திரன் எனது இடத்தில் வேலி போடக்கூடாது என தகராறு செய்தார். 1வது எதிரி கம்பால் என்னுடைய முழங்கைக்கு மேல் அடித்தார். மேலும் இங்கு வேலி போடக்கூடாது போட்டால் உன்னை கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார்.

2. 2வது எதிரி கம்பால் எனது தலையில் அடித்தால் விழுந்துவிட்டேன்.அப்போது 1வதுஎதிரி எனது தலைமுடியை பிடித்து இழுத்து மேலும் 1வது எதிரி வயிற்றில் மிதித்ததால் முடியாமல் போனது. அப்போது சாட்சி அபிநயா

மற்றும் அகல்யா மற்றும் அப்பா சாட்சி சின்னதம்பி ஆகியோர்கள் சம்பவத்தை விலக்கினார்கள். அப்போது 1வது எதிரி சாட்சி சின்னத்தம்பியின் கம்பால் அவரது தலையில் அடித்ததால் அவருக்கு காயம் ஏற்பட்டது. சாட்சி அபிநயாவை கம்பால் முதுகில் 1வது எதிரி அடித்து காயத்தை ஏற்படுத்தினார். சாட்சி அகல்யாவையும் 1வது எதிரி தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார். அதன் பின்னர் தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்து சேர்ந்தோம். மருத்துவ சிகிச்சையில் இருந்த போது போலீசார் என்னிடம் புகார் மனு பெற்றார்கள். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1)**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரிகள் தரப்பில் குவிமுச 242(3)ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனால் அ.சா.1ன் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.